## உங்கள் சகோதரனிடமிருந்து....

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப்பங்காளர்களே!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம். ஜெபமாதமான ஆகஸ்ட் மாதம் முழுவதும் 40க்கும் மேற்பட்ட ஆலயங்களில், ஜெபவீடுகளில், பொது இடங்களில் உபவாச ஜெபங்களை நடத்த தேவன் வாசல்களை திறந்து கொடுத்தார். நம்மோடு ஒத்துழைத்த ஒவ்வொரு சபையின் போதகர்களையும் ஊழியர்களையும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்புடன் வாழ்த்துகிறோம். நம்மை தங்கள் திருச்சபை களில் அழைத்து உபவாச ஜெபங்களை நடத்த உற்சாகப்படுத்தினார்கள். உடனிருந்து ஜெபித்தார்கள். ஒத்துழைத்தார்கள். சபையாரை கலந்து கொள்ள உற்சாகப்படுத்தி னார்கள். அவர்களுடைய எல்லாப் பிரயாசங்களுக்காகவும் தேவனைத் துதிக்கிறோம்.

தொடர்ந்து இன்னமும் உபவாச ஜெபங்களை தங்கள் சபைகளில் நடத்த செப்டம்பர் மாதத்திலும் ஒழுங்கு செய்திருக்கிற போதகர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். சென்ற மாதம் (ஜெப மாதத்தில்) இந்த மாதம் நடக்க இருக்கும் இடங்களில் உபவாச ஜெபங்களை நடத்த நம்மால் முடியாததால் செப்டம்பர் மாதத்திலே ஜெப மாதத்தின் உபவாச ஜெபத் தொடர்ச்சி, உபவாச ஜெபங்கள் நடைபெற உள்ளன. தேவன் இவ்விதம் செய்த கிரியைக்காக தேவனைத் துதியுங்கள்.

ஆகஸ்ட் மாதத்தில் ஆலய கட்டுவதற்கான, நெல்லை மாவட்டத்தில் ஒரு இடம் வாங்க அம்பாசமுத்திரத்தை சேர்ந்த திருமதி. ரூபி (ஓய்வு பெற்ற ஆசிரியை) குடும்பத்தினர் ஒரு லட்ச ரூபாய் கொடுத்து உதவி செய்தார்கள். விருதுநகர் மாவட்டத்தில் இடம் ஒரு குடும்பத்தினரால் நமக்கு காணிக்கையாக கொடுக்கப்பட்டுள்ளது. தேவன் அந்த இரு குடும்பத்தினர்களையும் ஆசீர்வதிப்பாராக.

தற்போது பேட்மா நகரம், தூத்துக்குடி மாவட்டம், சின்னக்காளான்பட்டி, திருவேங்கடம், அழகப்பபுரம் (நெல்லை மாவட்டம்) ஆகிய நான்கு இடங்களில் மிஷனெரி ஆலயக் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. சாத்தூரிலும், நமது தலைமை அலுவலகத்திலும் மிஷனெரி இல்லக் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. **ஏழாயிரம்பண்ணை, தேவனுடைய கூடாரத்தில்** ஊழியம் ஆரம்பித்து 2014 அக்டோபர் மாதத்தோடு 20 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. அதற்காக ஒரு பொது கன்வென்ஷன் மேடை கட்ட ஜெபத்துடன் ஆயத்தப்படுகிறோம். தேவன் நல்ல விஸ்தாரமான கன்வென்ஷன் மைதானத்தை தந்துள்ளார். எந்த சபையினரும் எந்த ஊழியத்தினரும் பயன்படுத்தத் தக்கதாக அதை ஏற்படுத்த ஜெபித்து செயல்படுகிறோம்.

ஆகஸ்ட் மாத சிறப்பு உபவாச ஜெப முகாம் 15,16,17 தேதிகளில் தேவன் நடத்தி தந்தார். 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு ஜெபித்தார்கள். தேவப்பிரசன்னம் ஜெபித்தவர்களை ஆட்கொண்ட சாட்சிகளை கேட்டோம். தேவனைத் துதிக்கிறோம். ஆகஸ்ட் 29இல் 24 மணி நேர ஜெபத்திற்காக (இடம் : கடையம், மாதாபுரம், இயேசு விடுவிக்கிறார் ஜெபமலை) ஜெபத்துடன் ஆயத்தப்படுகிறோம். இந்தப் பத்திரிக்கை உங்கள் கையில் கிடைக்கும்போது அந்த ஜெபம் நடந்து முடிந்திருந்திருக்கும். தொடர்ந்து ஊழியங்களுக்காக ஜெபிக்கிற, தாங்குகிற உங்களுக்கு நன்றி. நாங்களும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

அன்புடன் உங்கள் சகோதரன்

**பா. பொற்செல்வன் ஆசீர்**



## நான் என்ன செய்ய வேண்டும்?

**தொடர் - 70**

**செப்டம்பர் 2014**

*தொகுப்பு :* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**அப்போஸ்தலர்**

3501 மனந்திரும்பிக் குணப்படு (26:20)
3502 மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய் (26:20)
3503 சிறியோருக்கும் பெரியோருக்கும் சாட்சி கூறு (26:20)
3504 பிறரை பட்சமாய் நடப்பி (27:3)
3505 திடமனதாயிரு (27:22,25); பயப்படாதே (27:24); தேவனிடத்தில் நம்பிக்கையாயிரு (27:25)
3506 புசிக்கத் தொடங்குமுன் தேவனை ஸ்தோத்திரி (27:35)
3507 தேவனுடைய ராஜ்யத்தை குறித்துப் பிரசங்கி (28:23,31)
3508 இயேசு கிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசி (28:23,31)

**ரோமர்**

3509 தேவப்பிரியனாயிரு (1:2)
3510 இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் விசவாசத்துக்குக் கீழ்ப்படி (1:7)
3511 உன் விசுவாசம் பிரசித்தமாவதாக (1:8)
3512 தேவனை ஸ்தோத்திரி (1:21, 7:25)
3513 ஜெபம் பண்ணு (1:9)
3514 சுவிசேஷத்தைப் பிரசங்கி (1:15)
3515 கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படாதே (1:16)
3516 விசுவாசிக்கும் நீதிமானாயிரு (1:17)
3517 சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்காதே (1:18)
3518 தேவனைத் தேவனென்று மகிமைப்படுத்து (1:21)
3519 உணர்வுள்ள இருதயத்தோடிரு (1:21, 3:11)
3520 அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றாதே (1:23)
3521 தேவனுடைய சத்தியத்தை பொய்யாக மாற்றாதே (1:25)
3522 சிருஷ்டிகரைத் தொழுது சேவி (1:25)
3523 சிருஷ்டியைத் தொழுது சேவியாதே (1:25)
3524 பெண்ணே! சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றாதே (1:26)
3525 ஆணே! பெண்ணைச் சுபாவப்படி அநுபவி (1:27)
3526 ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பியாதே (1:27)
3527 தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிரு (1:28)
3528 தகாதவைகளைச் செய்யாதே (1:28)
3529 அநியாயம் வேண்டாம் (1:29)
3530 வேசித்தனம் வேண்டாம் (1:29)
3531 துரோகம் வேண்டாம் (1:29)
3532 பொருளாசை வேண்டாம் (1:29)

3533 குரோதம் வேண்டாம் (1:29)
3534 பொறாமை கொள்ளாதே (1:29)
3535 கொலை செய்யாதே (1:29)
3536 வாக்குவாதத்தினால் நிறைந்தவனாயிராதே (1:29)
3537 வஞ்சகம் வேண்டாம் (1:29)
3538 வன்மம் வேண்டாம் (1:29)
3539 புறங்கூறாதே 91:30)
3540 அவதூறு பண்ணாதே (1:30)
3541 தேவ பகைஞனாயிராதே (1:30)
3542 துராகிருதம் பண்ணாதே (1:2)
3543 அகந்தையுள்ளவனாயிராதே (1:30)
3544 வீம்புக்காரனாயிராதே (1:30)
3545 பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவனாயிராதே (1:30)
3546 பெற்றோருக்குக் கீழ்ப்படி (1:30)
3547 உணர்வில்லாதவனாய் இராதே (1:30)
3548 உடன்படிக்கைகளை மீறாதே (1:30)
3549 சுபாவ அன்பில்லாதவனாயிராதே (1:30)
3550 இணங்காதவனாயிராதே (1:30)

### 2014-இல் V.B.S. நடைபெற்ற கிராமங்கள் தொடர்ச்சி

| தூத்துக்குடி மாவட்டம் | திருநெல்வேலி மாவட்டம் |
|---|---|
| பணித்தளம் : **தட்டப்பாறை** | பணித்தளம் : **அத்தியூத்து** |
| 294 மேலத்தட்டப்பாறை | 299 அகரம் |
| 295 மேலத்தட்டப்பாறை பள்ளி | **விருதுநகர் மாவட்டம்** |
| 296 சிறுவர்களுக்காகன அரசினர் குழந்தைகள் இல்லம், தட்டப்பாறை | 300 ஒத்தையால் காலனி |
| | 301 வாழவந்தான்புரம் |
| 297 செட்டியூரணி | பணித்தளம் : **சாத்தூர்** |
| பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை** | 302 வாழவந்தான்புரம் |
| 298 தோழப்பண்ணை | 303 ஒத்தையால் காலனி |

**நன்றி!** நமது ஆண்டாள்நகர் பணித்தளத்தின் விசுவாசக்குடும்பமான திரு. செல்வம் அவர்கள் குடும்பத்தினர் தங்கள் உபயோகத்திலிருந்த TVS Champ வாகனத்தை ஊழிய உபயோகத்திற்கு கொடுத்துள்ளனர். தேவன் அவர்களை ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

## *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

**நாள் : 2014 செப்டம்பர் 25 – கடைசி செவ்வாய்**
**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**
**இடம் : காமராஜர் திருமண மண்டபம்,**
**பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**
*தேவசெய்தி :* **சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**



# தரித்துக்கொள்ளுங்கள்

சகோ. **S. ஜெபராஜ்** President, Grace Ministries

இன்ப இயேசுவின் இனிய நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாத இதழ் மூலமாக நாம் நீதியையும் பரிசுத்தத்தையும் தரித்துக்கொள்ளுகிற வாழ்க்கை வாழ வேண்டும் என தேவன் நம்மை உணர்த்தி வழிநடத்தினார். இன்னும் நாம் தரித்துக்கொள்ள வேண்டியவைகள் உண்டு. அப்போஸ்தராகிய பரிசுத்த பவுல் வழங்குகிற நல்ஆலோசனைகளில் "நீங்கள் உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும் நீடிய பொறுமையையும் தரித்துக்கொள்ளுங்கள்" (கொலோ. 3:12) என்கிறார். கர்த்தர் லோத்துவின் மேல் வைத்த இரக்கத்தினாலே அந்தப் புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கையையும் அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய்விட்டு உன் ஜீவன் தப்ப ஓடிப்போ என்றார். (ஆதி. 19:16). லோத்து வாழ்ந்த சோதோம் அழிக்கப்படுகிற வேளையில் தேவன் அவன் மீது இரக்கம் பாராட்டினார். கர்த்தர் எவன்மேல் இரக்கமாயிருக்க சித்தமாயிருக்கிறாரோ அவன்மேல் இரக்கமாய் இருக்கிறார் (யாத். 33:19). அவர் ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறவர் (யாத். 20:6). கர்த்தருடைய இரக்கங்கள் மகா பெரியது (2சாமு. 24:14). அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை (புலம். 3:22). அவைகள் காலைதோறும் புதியவைகள் (புலம். 3:23).

### இரக்கத்தைத் தரித்துக்கொள்ளுங்கள்

தேவனுடைய பண்புகள் தேவனுடைய பிள்ளைகளுக்கு வேண்டும். கர்த்தாவே நான் பிழைத்திருக்கும்படிக்கு உமது இரக்கங்கள் எனக்குக் கிடைப்பதாக. (சங். 119:77). ஆண்டவரிடம் இரக்கங்களும், மன்னிப்பும் உண்டு. (தானி. 9:10). இரக்கம் உள்ளவர்கள் மட்டுமே தேவனிடத்தில் இரக்கம் பெற முடியும் (மத். 5:7). தரித்திரனுக்கு இரங்குவோன் பாக்கியவான் (நீதி. 14:21). நீங்கள் தசமபாகம் செலுத்தி நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டு விட்டீர்கள். இவைகளையும் செய்ய வேண்டும். அவைகளையும் விடாதிருக்க வேண்டும் (மத். 23:23). பவுல் அப்போஸ்தலன், ஒநேசிப்போருவின் வீட்டாருக்குக் கர்த்தர் இரக்கங் கட்டளையிடுவாராக. (2தீமோ. 1:16) என்பதாக வேண்டிக் கொள்ளுகிறார். தேவனுடைய அளவற்ற இரக்கத்தை நீங்களும் தரித்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இரக்கம் செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும். நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும். (யாக். 2:13). ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார். (நீதி. 19:17). இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன். (ரோமர் 12:8). பிறருக்கு இரக்கம் பாராட்டுங்கள். தேவனிடத்தில் இரக்கத்தைப் பெற்றுக்கொள்வீர்கள்.

### மனத்தாழ்மையைத் தரித்துக்கொள்ளுங்கள்.

இன்றைக்கு அநேகருடைய வாழ்க்கையில் வெளியில் தாழ்மையாய் நடந்து கொள்ளுவது போல காட்சியளிக்கிறார்கள். ஆனால் உள்ளத்திலோ மேட்டிமையான எண்ணங்களும், தாழ்த்த முடியாத அநேக பண்புகளும் பதிந்து கிடக்கிறது. இப்படிப்பட்டவர்களின் மாய்மாலமான தாழ்மை எந்தவிதத்திலும் தேவசமுகத்தில் நிற்க

முடியாது. யோசியா ராஜா கர்த்தருக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தி, தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு தேவனுக்கு முன்பாக அழுதபடியினால் தேவன் அவனுடைய விண்ணப்பத்தின் சத்தத்தைக் கேட்டார். (2இரா. 22:19). அவனைப்போலொத்த ராஜா அவனுக்கு முன் இருந்ததுமில்லை, அவனுக்குப் பின் எழும்பினதுமில்லை (2இராஜா. 23:25). தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். (நீதி. 3:34, யாக். 4:6, 1பேது. 5:5) மேன்மைக்கு முன்னானது தாழ்மை (நீதி. 15:33) மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும். மனத்தாழ்மையுள்ளவனோ கனமடைவான். (நீதி. 29:23). இயேசுவானவர் தாழ்மையாய் வாழ்ந்து காட்டினார். உன் ராஜா ரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும் (சகரி. 9:9)என இயேசுவை குறித்து வேதம் சொல்கிறது. இயேசு மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தினார். (பிலி. 2:8). அவர் தம்மைத் தாழ்த்தின போது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது. (அப். 8:33). அவருடைய அச்சடையாளமான இதே தாழ்மை உங்களில் காணப்படிகிறதா? மாயமான தாழ்மையினால் உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்.

தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையாயனவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள். (செப். 2:3). ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல் மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் (பிலி. 2:3). நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்டிந்து, மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தேவனுடைய பிள்ளைகள் என்ற சாட்சியைக் காத்துக்கொள்ள நீங்கள் மனத்தாழ்மையை அணிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

## சாந்தத்தையும் நீடிய பொறுமையையும் தரித்துக்கொள்ளுங்கள்

கர்த்தர் மோசேயை சீனாய் மலைக்கு காலமே வரும்படி அழைத்தார். மோசே அதிகாலமே எழுந்திருந்து கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே சீனாய் மலையில் ஏறினான். கர்த்தர் மேகத்தில் இறங்கி அவன் அருகே நின்று கர்த்தருடைய நாமத்தைத் கூறி கர்த்தர் இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும் மகா தயையும் உள்ள தேவன் (யாத். 34:1-6) ஆயிரம் தலைமுறைக்கு இரக்கத்தைக் காக்கிற தேவன் என்று கூறினார். KJV ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பில் Long suffering என்ற வார்த்தை ‘நீடிய சாந்தம்’ என்பதற்கும் ‘நீடிய பொறுமை’ என்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. சாந்தமும், நீடிய பொறுமையும் ஆவியின் கனி (கலா. 5:22,23). கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல் எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதக சமர்த்தனும் தீமையை சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும். (2தீமோ. 2:24) பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன். (நீதி. 16:32). நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். (மத். 11:29). அன்பு நீடியசாந்தமும் தயவுமுள்ளது. (1கொரி. 13:4). மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவனாயிருந்தான். (எண். 12:3). சாந்த குணமுள்ளவர்களுக்கு வழியை போதிக்கிறார். அவர்கள் பூமிக்கு சுதந்தரவாளிகள். அவர்கள் இரட்சிப்பினால்



அலங்கரிக்கப்படுவார்கள். சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் (மத். 5:5). என் இயேசு ராஜா சாந்தகுணமுள்ளவர். அவருடைய சாந்தகுணம் என்னிலே பிரதிபலிக்க வேண்டும். உங்கள் சாந்தகுணம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருப்பதாக. தேவமனுஷன் சாந்தகுணத்தை அடையும்படி நாட வேண்டும். காண்பிக்க வேண்டும். கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை உயர்த்துகிறார். (சங். 147:6). தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகளாகிய உங்களை சாந்த குணத்தினாலும், நீடிய பொறுமையினாலும் அலங்கரிக்கும்படி உங்களை தேவனுடைய பலத்த கரத்திற்குள் ஒப்புக்கொடுங்கள்.

எனது விசுவாச வாழ்வு அறிக்கை : நான் தேவனுடைய உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொள்ள தீர்மானிக்கிறேன்.

## 2014-இல் V.B.S. தன்னார்வ ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

இந்த ஆண்டு V.B.S. ஊழியத்தில் ஆலயமில்லாக் கிராமங்களில் நம்முடைய மிஷனரிகளோடு இணைந்து ஊழியம் செய்த தன்னார்வ ஊழியர்களின் பெயர்ப் பட்டியலை உங்கள் ஜெபத்திற்காக தந்துள்ளோம். ஒவ்வொருவர் பெயரையும் சொல்லி அவர்களுக்காக ஊக்கத்தோடு ஜெபிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் : **பெரியநாயகபுரம்**

1 Sis. முத்து ஜெபசெல்வி
2 Sis.B. எஸ்தர்
3 Bro.P. ஆஸ்பான்
4 Bro. டேவிட்ராஜா
5 Sis.K. பியூலா
6 Sis.K. ரூத்
7 Sis. அமுதா
8 Sis. ஜெயசீலி
9 Sis.S. ஏஞ்சல்

பணித்தளம் : **ஆண்டாள்நகர்**

10 Bro.T. நவநீதன்
11 Bro. ஜாண்
12 Sis. ஜாஸ்மின்
13 Sis. பானுமதி
14 Sis. தேன்மொழி
15 Sis. புஷ்பம்மாள்

பணித்தளம் : **தாதன்குளம்**

16 Sis. R. அனுஷ்யா
17 Sis. D. செரின்
18 Bro.R. ஜெபஸ்டின்
19 Sis. யூ. கலாவதி
20 Bro.N. ராஜகுரு
21 Sis.R. சித்ரா

பணித்தளம் : **சுப்பிரமணியபுரம்**

22 Sis. K. கவிதா
23 Sis. P. பியூலா
24 Sis. ஜெனிபர்
25 Sis. A. உமா
26 Sis.M. விஜயா
27 Sis.P. எஸ்தர்
28 Sis.G. பிளஸ்ஸி
29 Sis.G. கிரேஸி
30 Sis.S. எமிமா
31 Sis.S. ஜெஸி
32 Sis. S. ஜான்ஸி
33 Sis. ஏஞ்சல்
34 Sis. C. சோனியா
35 Sis.M. சுசீலா
36 Sis. செலின்
37 Sis. A. சாராள்
38 Sis. A. ரூத்

பணித்தளம் : **தாளமுத்துநகர்**

39 Sis. சுகன்யா
40 Sis. கிரேஸ்லின் ஐடா
41 Sis. மெல்டா
42 Sis. ரத்ன ஜோதி
43 Bro. பெனோ
44 Bro. அகிமாஸ் ஜோஸ்வா
45 Sis. சர்மிளா
46 Sis. ஜேஸ்மின்
47 Bro. மனோ
48 Sis. கிரேஸி
49 Sis. குளோரி
50 Sis. ரூபி
51 Sis. அட்லின்
52 Sis. காருண்யா
53 Bro. காசிராஜன்
54 Sis. நேசம்மாள்
55 Sis. ஷீலா
56 Sis. செல்லம்மாள்
57 Sis. ஜான்ஸி
58 Sis. எஸ்தர் பார்வதி
59 Sis. ஜெபா

**தூத்துக்குடி ரூரல்**

60 Sis. செண்பகவள்ளி
61 Sis. அனிட்டா
62 Sis. ஜெப பிரிஸ்கில்லா

63 Sis. சுகந்தி
64 Sis. ஜேஸ்மின்
65 Sis. ஜெப பியூலா
66 Bro. ஆத்திமுத்து
67 Sis. மாரீஸ்வரி
68 Sis. பிளஸ்ஸி
69 Sis. ராணி
70 Sis. ஜெஸி
71 Sis. ஜெபநவமணி
72 Sis. ரத்னாவதி
73 Sis. ஜெபா
74 Sis. தங்க சொர்ணம்
75 Sis. ரோஸ்லின்
76 Sis. ஜெயமணி பிரியா

பணித்தளம் : **புதுக்கோட்டை**

77 Sis. மேகலா
78 Sis. நிர்மலா
79 Sis. ஞானவடிவு
80 Sis. ஜெயராணி
81 Sis. பகவதி திருமணி
82 Bro. ஜெரேமியா
83 Sis. கிருபா
84 Sis. மல்லிகா
85 Sis. மேரா
86 Sis. பொன்னுத்தாய்
87 Sis. ரோஸ்லின்
88 Sis. கமலா
89 Sis. திவ்யா
90 Sis. செரின்
91 Sis. சத்யா
92 Bro. காட்வின்
93 Sis. மேரி முத்துசெல்வி

பணித்தளம் : **பேட்மாநகரம்**

94 Sis. சிவா
95 Sis. காமாட்சி
96 Sis. ராமலெட்சுமி
97 Sis. குமாரி
98 Bro. ஜாண் டேனியல்
99 Bro. ஜான் சாமுவேல்
100 Bro. முத்து செல்வம்

பணித்தளம் : **ஸ்ரீ மூலக்கரை**

101 Sis. பியூலா
102 Bro. சரவணன்
103 Sis. ராகேல்
104 Sis. நேசம்மாள்
105 Sis. ஹில்டா பிரபா
106 Sis. உஷா
107 Sis. ஆனந்த செல்வி
108 Sis. சுமதி

பணித்தளம் : **தட்டப்பாறை**

109 Bro. இம்மானுவேல்
110 Sis. திவ்யா
111 Sis. அமுதா ராஜன்
112 Sis. ஜெயராணி

பணித்தளம் : திருக்களூர்

113 Bro. ஆனந்தராஜ்
114 Sis. பத்மா
115 Sis. கௌரி
116 Sis. ஸ்ரீஜா
117 Sis. ஆறுமுகம்@ஆனந்தி
118 Sis. சித்ரா
119 Sis. வேம்புகனி
120 Sis. வசந்தி
121 Sis. எஸ்தர்
122 Sis. ஜீவா
123 Sis. பியூலா
124 Sis. ஜெனிட்டா

பணித்தளம் : **பிச்சிவிளை**

125 Sis.D. ஆனந்தி
126 Sis.J. எஸ்தர்
127 Sis.C. சசிகலா
128 Sis.D. முத்து
129 Sis.U. மரியா
130 Sis.J. ஜெஸிலா
131 Sis.S. ரஞ்சிதம்
132 Sis. விஜி
133 Sis. சாந்தி
134 Sis. பவானி
135 Sis. விஜயா
136 Sis.B. மெர்சிராணி
137 Sis.B. லதா
138 Sis. லிடியா
139 Sis. ஜெயந்தி
140 Sis. மெர்லின்
141 Sis.S. கிரேனா
142 Bro.J. ராபர்ட்
143 Bro. S. டேவிட்
144 Sis.D. ரேச்சல்
145 Sis. ஜெனிபர்
146 Sis. சந்திரா
147 Sis. ஜெபா
148 Sis. திவ்யா
149 Sis.A. ஸ்டெபி

பணித்தளம் : **அய்யனேரி**

150 Sis.A. பாக்கியலெட்சுமி
151 Sis. சாலினி
152 Sis. நிவேதா
153 Bro. இராமானுஜம்
154 Bro. டேவிட் ஞானபிரகாஷ்
155 Sis. ரூத் ராணி
156 Sis. சிவாணி
157 Sis. பவித்ரா
158 Sis. சௌமியா
159 Sis. சாந்தி

பணித்தளம் : **அப்பனேரி**

160 Sis. பாக்கியலெட்சுமி
161 Sis. நாகஜோதி
162 Sis. ரெஜினா

பணித்தளம் : **முக்கூட்டுமலை**

163 Bro.V. ரகு

**திருநெல்வேலி மாவட்டம்**

பணித்தளம் : **அத்தியூத்து**

164 Sis. சலோமி லீதியாள்
165 Sis. கிரேஸ்
166 Bro. ஜேசுராஜ்
167 Sis. முத்துக்கனி
168 Sis. காந்திமதி
169 Sis. வசந்தி
170 Sis. ராஜேஸ்வரி
171 Bro. அருள்செல்வம்
172 Bro. முருகன்

பணித்தளம் : **அழகப்பபுரம்**

173 Sis.S. ரூத்
174 Sis.S. மீனா
175 Bro.S. ஏசுராஜ்
176 Sis.P. நிஷா
177 Sis.P. சுவேதா
178 Sis.N. பிரியங்கா
179 Sis.S. சுமதி



பணித்தளம் : **அம்பாசமுத்திரம்**

180 Sis. புஷ்பா சந்திரசேகர்
181 Sis. சாந்தி
182 Sis. லதா
183 Sis. ராணி
184 Sis. பிலோமினாள்
185 Sis. ஜெஸிந்தா
186 Sis. கனி
187 Sis. அலிஸ்மேரி
188 Sis. ரத்தினபாய்
189 Sis. சந்தியா எப்சி
190 Sis. திவ்யா மேரி
191 Sis. அனுஷ்யா மேரி

பணித்தளம் : **வாகைக்குளம்**

192 Sis. லலிதா
193 Sis. அனிதா
194 Sis. மரியம்மாள்
195 Sis. பிரயதர்ஷினி
196 Sis. ஏஞ்சல்

பணித்தளம் : **மைப்பாறை**

197 Bro. மரியசெல்வம்

பணித்தளம் : **திருவேங்கடம்**

198 Bro. பிரபு
199 Sis.P. கலைச்செல்வி
200 Sis. சரோஜா

**விருதுநகர்மாவட்டம்**

பணித்தளம் :

**N. திருவேங்கிடபுரம்**

201 Sis. பிரரூபா

பணித்தளம் : **புல்லலக்கோட்டை**

202 Sis. பிரேமா
203 Sis. ராய்தா
204 Sis. ராமலெட்சுமி
205 Sis. தர்ஷினி
206 Bro. ஜாண்சன்
207 Bro. சாலமோன்
208 Sis. நித்யா
209 Bro. முருகன்

பணித்தளம் : **சிவகாசி**

210 Sis. ஏஞ்சல்
211 Sis. நித்யா
212 Sis. ஜோதி பால்யா
213 Sis. ரூத்
214 Sis. உமா தேவி
215 Sis. சந்தியா
216 Sis. சுவாதிபிரியா
217 Sis. கிரேஸ்
218 Bro. ஜெரோம்
219 Bro. கௌசிக்
220 Sis. தினேஷ்வரி
221 Sis.G. எஸ்தர்

பணித்தளம் : **பண்டுதன்பட்டி**

222 Sis.K. ஜெயகிறிஸ்டி
223 Sis. விஜயா
224 Sis. தேவி

பணித்தளம் :

**ஜமின் சல்வார்பட்டி**

225 Sis.A. ஹெப்சிபா
226 Sis.P. ராமலெட்சுமி
227 Bro.K. கணேஷ்குமார்
228 Bro. K. அருண்குமார்
229 Bro. தினேஷ்குமார்
230 Sis. இவாஞ்சலின்

பணித்தளம் :

**புல்லக்கவுண்டன்பட்டி**

231 Sis. தரனி
232 Sis. பிரியா
233 Sis. ஆபி
234 Sis. சாந்தி
235 Sis. ராணி
236 Bro. அஜெய்
237 Bro. ஜாண்
238 Sis. தெபோராள்
239 Bro. சூர்யா
240 Sis. கனிப்பிரியா

பணித்தளம் :

**முத்தாண்டியாபுரம்**

241 Sis. சுவீட்டி

பணித்தளம் : **சாத்தூர் ரூரல்**

242 Bro. முத்து
243 Bro. ஹரிஹரன்
244 Sis. கார்த்திகா தேவி
245 Bro. ஜோசுவா
246 Sis. மோனிகா
247 Sis. பாண்டிச்செல்வி
248 Bro. செல்வம்
249 Bro. சதீஸ்குமார்
250 Sis. கனகா
251 Sis. மோனிகா
252 Bro. நிவாஷ்
253 Bro. விக்னேஷ்
254 Bro. பாபு
255 Sis. தேவி
256 Sis. பவித்ரா
257 Bro. வேல்முருகன்
258 Bro. தனக்குமார்

**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : **திரளி**

259 Sis.D. ரூபவதி பெனி
260 Sis.D. கிருபா சுவீட்லின்
261 Bro. D. ஸ்டெப்பின்திர்ஷாதா
262 Sis.D. எஸ்தர் ஷைனி
263 Sis.C. செல்சியா
264 Sis. ஜயம்மாள்
265 Sis. பிச்சையம்மாள்

**அரியலூர் மாவட்டம்**

பணித்தளம் :

**வெத்தியார்வெட்டு (மிஸ்பா)**

266 Sis. அமலி
267 Sis. பிரியா
268 Sis. ரோஸ்லின் மேரி
269 Bro. தங்கராசு
270 Bro. பார்த்திபன்
271 Bro. பால்பாண்டியன்

**திருச்சி மாவட்டம்**

பணித்தளம் : **தோப்புப்பட்டி**

272 Bro. அருண்குமார்
273 Bro. சதீஸ்
274 Bro. அருண்
275 Bro. ஜெயசீலன்
276 Bro. சத்திய மூர்த்தி
277 Bro. அஜீத்

**திருப்பூர் மாவட்டம்**

278 Sis. பிரியா
279 Sis. சுஜித்தா
280 Sis. ஜெனிபர்
281 Sis. ரோஸ்மெர்லின்
282 Sis. எஸ்தர்
283 Bro. பார்த்திபன்
284 Sis. லியோ
285 Sis. சார்லி
286 Sis. சரோஜா
287 Bro. பிரேம்குமார்

தொடரும்...

# PREACHING TRUE TO CALLING

**Dr. P. Selvaraj, Pollachi**

"It is not enough, .... that the man of God Preach (Prophesy) the truth .... without being personal the true prophet (Preacher) will ... Pierce the conscience of each listener as if the message had been directed to him (her) alone" - A.W. Tozer.

These words of A.W. Tozer motivated me to write this message. I took his view as a hypothesis that I wanted to test on the basis of a few key verses in the Bible on the topic of preaching. "Before the resurrected Christ was taken up into heaven He commissioned his II disciples (excluding Judas Iscariot) to go into all the world and preach the good news to all creation" (Mark 16:15) Paul gave Timothy the charge of patience and careful instruction (2Tim. 4:2) Jesus called His first disciples to whom he said, "The time has come ... the kingdom of God is near. Repent and believe the good news" (Mark 1:15). Paul writes in 1Cor. 1:17 "For Christ did not send me to baptize but to preach the gospel not with words of human wisdom, lest the cross of Christ be emptied of its power. After Peter addressed the crowd, the christ who listened to him asked the apostles, "Brothers, what shall we do?" Peter replied, "Repent and be each one of you, baptized in the name of Christ for the forgiveness of your sins... (Acts. 2:37;38).

Jesus preached boldly fulfilling God's will. Peter preached boldly in obedience to the great commission. Paul preached boldly true to his calling. Do we preach true to our calling? We should preach the truth of course, but that's not enough. We should "pierce the conscience of each listener". Only that would quality as preaching true to calling. How many sermons lead to repentance these days? not to speak of baptism.

Jesus preached with authority. The people were amazed at His (Jesus') teaching (preaching), because he tought (preached to) them as one who had authority, not as the teachers (preachers) of the Law (pharisees) (Mark 1:22). We may not have that much authority but we should preach Straight from the heart and direct to the listener's heart without being hypocrital, at least.

"My (Paul) message and my preaching were not with wise (worldly wise) and persuasive words but with a demonstration of the (Holy) Spirits Power, So that your faith might not rest on men's wisdom, but on God's Power" (1Corinthians 2:4-5). We can't "pierce the conscience of each listener" unless we are filled with a the Power of the Holy Spirit. The preacher should be holy enough to receive that power. "...It is written (in scripture): Be holy, because I am (Jesus Christ) holy" (1Peter 1:16).


**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

**தேவனுடைய கூடாரத்தில் திறப்பின் வாயில் ஜெபம்**

2014 செப்டம்பர் 28, கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடி

**நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்!**

**இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!**

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194




## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும். நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.

---

**கிருபையின் ஊழியங்கள், தூத்துக்குடி**

## திருவசனத்தேர்வு 2014

**மாதிரி வினாத்தாள்**

தேதி மாற்றம்
**தேர்வு நாள்**
**26.10.2014 ஞாயிறு**

**I சரியான விடையை தேர்ந்தெடுக்க :**

1. மனரம்மியமோ நித்திய ... அ) மருந்து ஆ) விருந்து இ) மகிழ்ச்சி ஈ) ஐசுவரியம்

**II பொருத்துக :**

1. அவர் பெருகவும் நான் சிறுகவும் மாற் 1:11
2. நீர் என்னுடைய நேச குமாரன் யோவான் 3:30

**III வரிசைப்படுத்துக :**

இருப்பீர்களாக, திக்கற்ற, விதவைகளையும், பிள்ளைகளையும், ஒடுக்காமல்

(விடை : விதவைகளையும் திக்கற்ற பிள்ளைகளையும் ஒடுக்காமல் இருப்பீர்களா)

**IV சரியா? தவறா?**

21 ஞானமுள்ளவனுக்குப் போதகம் பண்ணாதே

**V கோடிட்ட இடங்களை நிரப்புக :**

26) உங்களிலிருக்கிறவர்...............

**VI இருப்பிடம் தருக :**

31) இயேசுவானவர் .......................... ஜெயிக்கிறவன் யார்?

**VII கீழ்க்கண்ட வார்த்தைகளில் தொடங்கும் வசனங்களை இருப்பிடத்துடன் எழுதுக.**

41) ......................... ஐயோ என்றார்.

**IX கீழ்க்கண்ட இருப்பிட வசனங்களை எழுதுக.**

46) பேதுரு 2:20

**X கீழ்க்கண்ட வார்த்தைகளில் தொடங்கும் வசனங்களை எழுதுக.**

துன்மார்க்கனுடைய வீட்டில்...... இது போன்ற கேள்விகள்